DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 41/2025
Miscellaneous :
Sessions : PW 5
Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | ஸ்டாலின் ராஜ் |
| Father / Husband Name | சின்னகன்னு |
| Village | ரெட்டிபாளையம் |
| Taluk | மதுராந்தகம் |
| Age | 35 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **11.11.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ரெட்டிபாளையத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன்.

என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** தேதி மற்றும் மாதம் ஞாபகம் இல்லை. போலிசார் கையொப்பம் மட்டும் கேட்டதால் நான் கையொப்பம் செய்தேன். வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 07.12.2021 ம் தேதி மதியம் 3.30 மணிக்கு நானும் ரகுவரன் என்பவரும் எங்கள் ஊரில் உள்ள பிள்ளையார் கோவில் அருகே அமர்ந்து கொண்டிருந்தபோது போலிசார் 06.12.2021 ம் தேதி எங்கள் ஊரை சேர்ந்த லட்சுமி மற்றும் பச்சையப்பன் என்பவருக்கும் இடையே ஏற்பட்ட சண்டை சம்மந்தமாக சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததற்கு சாட்சியாக கையொப்பம் செய்ததாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை**

Stalin C.

Type written in my dictation to open court read over to the witness ... and in the presence of the accused and admitted by the witness to be correct.
11/11/25
**Judicial Magistrate No.II**
**Madurantakam**

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 41/2025
Miscellaneous :
Sessions : PW 6
Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| Name | சத்தியராஜ் |
|---|---|
| Father / Husband Name | சின்னகன்னு |
| Village | ரெட்டிபாளையம் |
| Taluk | மதுராந்தகம் |
| Age | 38 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **11.11.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ரெட்டிபாளையத்தில் வசித்து அரசு பேருந்தில் நடத்துனராக வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் வழக்கமாக எனது பணிக்கு சென்று வீட்டிற்கு வந்தேன். அப்போது லட்சுமி என்பவர் என்னிடம் வந்து பச்சையப்பன் தன்னை அடித்துவிட்டதாக கூறினார். வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 06.12.2021 ம் தேதி காலை 7.30 மணிக்கு நான் தெரு குழாயில் தண்ணீர் குடித்து கொண்டிருந்தபோது எங்கள் ஊரை சேர்ந்த பச்சையப்பன் என்பவர் அவரது குழந்தை சித்தார்த் என்பவரை தூக்கிக்கொண்டு பிள்ளையார் கோவில் தெரு வழியாக வந்து கொண்டிந்த போது மேற்படி தெருவில் நின்று கொண்டிருந்த லட்சுமி என்பவர் மேற்படி பச்சையப்பனை வழி மடக்கி அசிங்கமாக பேசி அவரது சட்டையை பிடித்து தெருவில் இருந்த மண்ணை அள்ளி பச்சையப்பன் மற்றும் அவரது குழந்தையின் மீது கொட்டி அங்கிருந்த கற்களை எடுத்து அவர்களின் மீது வீசி அதை தடுக்க வந்த பச்சையப்பனின் மனைவி கோகிலாவையும் லட்சுமி அசிங்கமாக பேசி மேற்படி அவர்களையும் கொன்றுவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததை நான் நேரில் பார்த்ததாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை**

C.சத்தியராஜ்

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.
11/11/25
Judicial Magistrate No.II
Madurantakam